பக்கங்கள் 23


# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 02 | வெள்ளிக்கிழமை | 16.05.2025 அதிர்வு 284

ஐந்தரை மாதங்களில் மட்டும்

## வீதி விபத்துக்களால் 965 பேர் உயிரிழப்பு!

(எஸ்.ஜினோதன்)



இலங்கையில் இவ் வருடம் ஜனவரி முதல் மே மாதம் 14 ஆம் வரையான காலப்பகுதி 03▶

இனப்படுகொலை இடம்பெறவில்லையெனில்

# சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் அஞ்சுவது ஏன்?

### வெளிவிவகார அமைச்சரிடம் கஜேந்திரகுமார் எம்.பி. கேள்வி

“தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசால் இனப்படு கொலை நிகழ்த்தப்பட்டதாகக் கண்டறியப்படவில்லை என நீங்கள் உண்மையிலேயே நம்புவீர்களாக இருந்தால், சர்வதேச சுயாதீன குற்றவியல் விசாரணையை எதிர்கொள்வதற்கும், இலங்கை அரசு எவ்வித குற்றத்திலும் ஈடுபடவில்லை என்பதை நிரூபிப்பதற்கும் எதற்காக அஞ்சுகிறீர்கள்?”

- இவ்வாறு எவெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர 02▶





# அரசியல் மாற்றத்தின் செய்தியை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்வது இராஜதந்திரிகளின் பொறுப்பு

### புதிய தூதுக்குழுத் தலைவர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தின் செய்தியைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச் செல்வதும், சர்வதேச சமூகத்தின் முன் இலங்கையின் நற்பெயரை மேம்படுத்துவதும் தூதுவர்களின் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பல்வேறு நாடுகளுக்கான இலங்கையின் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுச் செல்லும் புதிய தூதுக்குழுத் தலைவர்களுடன் நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் 03▶





‘அதிகாரம் கெடுவிக்கும்; முழுமையான அதிகாரம் முற்றிலும் கெடுவிக்கும்.’(‘Power tends to corrupt and absolute power corrupts absolutely.’)

பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் ஆக்டன் பிரபுவின் மேற்கோள் இது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவின் தற்போதைய எதேச்சாதிகாரப் போக்கை அம்பலப்படுத்துவதற்கு இந்த மேற்கோளைதான் தமது எக்ஸ்தளப் பதிவில் நேற்று குறிப்பிட்டிருக்கிறார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

ஜே.வி.பியின் 60 ஆம் ஆண்டு நினைவு தினக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா தம்முடைய நிறைவேற்றதிகாரத்தை மார்தட்டிக் கூறித் தனது மேலாண்மைத் திமிரை வெளிப் 03▶

# இலங்கைக்கான புதிய தூதுவர்கள் 7 பேர் நேற்று நற்சான்று பத்திரங்கள் கையளிப்பு

இலங்கைக்குப் புதிதாக நியமனம் பெற்று வந்த தூதுவர்கள் 7 பேர் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடம் உத்தியோகபூர்வமாக தங்களது நற்சான்று பத்திரங்களை கையளித்தனர்.

ஆஜன்டீனா குடியரசு, சிம்பாப்வே குடியரசு, இஸ்ரேல், பிலிபைன்ஸ் குடியரசு, டஜிகிஸ்தான் குடியரசு, கம்போடியா இராச்சியம் மற்றும் டென்மார்க் இராச்சியம் ஆகிய நாடுகளின் புதிய தூதுவர்களே இவ்வாறு நியமனம் பெற்றுள்ளனர்.

நேற்று நற்சான்று பத்திரங்களைக் கையளித்த தூதுவர்களின் பெயர் விவரம் வருமாறு,

01. மாரியானோ அகுஸ்டின் கவ்சினோ – புதுடில்லியிலுள்ள ஆஜன்டீனா குடியரசின் தூதரகம்

02. ஸ்டெல்லா ந்கொமோ – புதுடில்லியில் உள்ள சிம்பாப்பே தூதரகம்

03. ரூவென் ஹவீயர் அசார் – புதுடில்லி இஸ்ரேல் தூதரகம்

04. நினா பி. கயிங்லெட் – டகாவிலுள்ள பிலிபைன்ஸ் துதரகம்

05. லுக்மொன் போபோகலொன் சோடா – புது டில்லியிலிருக்கும் டஜிகிஸ்தான் குடியரசு தூதரகம்

06. ரத் மெனி –புதுடில்லியில் உள்ள கம்போடியா இராச்சியத்தின் தூதரகம்

07. ரஸ்மஸ் கிறிஸ்டென்சன் – புதுடில்லியிலுள்ள டென்மார்க் இராச்சியத்தின் தூதரகம்

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க உள்ளிட்டவர்கள் இதில் கலந்துகொண்டனர்.







## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கனடாவின் பிரம்டன் நிகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம், கடந்த 10 ஆம் திகதி அந்நகர மேயர் பற்றிக் பிரவுனால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அதுமாத்திரமன்றி கனடாவின் ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 104 ஆம் இலக்க தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரச் சட்டத்தின் பிரகாரம் இம்மாதம் 12 – 18 ஆம் திகதி வரையான ஒரு வார காலம் தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷை வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், எவ்வித ஆதாரமும் அற்ற இனப்படுகொலைக் குற்றச்சாட்டு மற்றும் அதனை அடிப்படையாகக்கொண்ட நினைவுச் சின்னத்தை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் என்பன தொடர்பில் கடும் ஆட்சேபனையை வெளிப்படுத்தினார். அதுமாத்திரமன்றி இவ்வாறான நடவடிக்கைகள் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான அரசின் முயற்சிகளைப் பெரிதும் பலவீனப்படுத்தி சிக்கலாக்குவதாகவும் அவர் விசனம் வெளியிட்டார்.

இது குறித்து ஊடகங்களிடம் நேற்று வியாழக்கிழமை கருத்து வெளியிட்டுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

"தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசால் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டதாகக் கண்டறியப்படவில்லை என நீங்கள் உண்மையிலேயே நம்புவீர்களாக இருந்தால், சர்வதேச சுயாதீன குற்றவியல் விசாரணையை எதிர்கொள்வதற்கும், இலங்கை அரசு எவ்வித குற்றத்திலும் ஈடுபடவில்லை என்பதை நிரூபிப்பதற்கும் எதற்காக அஞ்சுகிறீர்கள்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

அதுமாத்திரமன்றி ரோம் பிரகடனத்தில் கைச்சாத்திட்டு, அதனூடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஏன் இடமளிக்கவில்லை என்றும் அவர் வினவியுள்ளார்.

"உண்மைக்கு அரசு அஞ்சுகின்றது என்பதே யதார்த்தமாகும். உண்மையின் ஊடாக மாத்திரமே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியும். இருப்பினும் முன்னைய அரசுகளைப் போன்று உங்களது அரசும் அதனைத் தொடர்ந்து நிராகரித்து வருகின்றது." – என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. விசனம் வெளியிட்டுள்ளார்.

# மீனவர் ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை

இந்த வருடத்திற்குள் மீனவர் ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்த வுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. மீன்பிடி சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித் துள்ளார். இதனை முன்னிட்டு உப குழு அண்மையில் நியமிக்கப்பட்டது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தும் விதத்தில் உரையாற்றி இருக் கிறார்.

சிங்கள - பௌத்த பேரினவாதக் கோர்முகம் கொண்ட ஜே.வி.பிக்கு, தேசிய மக்கள் சக்தி என்ற முகமூடியை போட்டு, இணக்கமான ஒரு வெளிப் பாட்டை முன்னிறுத்திய அநுரகுமார அணியின் தந்திரோபாயம் இப்போது சாயம் வெளுத்து, முகமூடி கழன்று, அம்பலமகும் நிலைக்கு வந்து இருக் கின்றது.

ஆட்சி பீடத்துக்குள் மிதவாதஓ போக்கு கொண்ட தேசிய மக்கள் சக்தி தரப்புக்கும், பேரினவாத மேலாண்மைத் திமிர்ப்போக்கு கொண்ட ஜே.வி.பிக்கும் இடையில் இடம்பெற்ற இழுபறியில் இப்போது ஜே.வி.பி. பக்கம் சாய்ந்து விட்டார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா என்பதையே அவரது அந்த உரை வெளிப்படுத்துவதாக கொழும்பு விமர்சிகர்கள் கருத்துக்களை முன்வைத்து வருகிறார்கள்.

இனி, ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்கா விரும்பினாலும், விரும்பா விட்டாலும் சிங்கள பேரினவாதத்தின் கடும் போக்கு நிலைப்பாட்டையே அவர் வெளிப்படுத்துவார், அவரது பேசிய மக்கள் சக்தியின் மிதவாத போக்கு அடிபட்டு போகிறது என்கிறார் கொழும்பு ஊடகவியலாளர் ஒருவர்.

மக்கள் ஆதரவு செல்வாக்கை இழக் கும் போது தெற்கில் அதை தூக்கி நிறுத்த வழமை போல - முன்னைய ஆட்சித் தலைவர்கள் போல - பேரின வாதத்தை கையில் எடுக்கிறார் இந்த தலைவரும் என்பதுதான் இப்போதைய நிலைப்பாடாக வெளிப்படுகின்றது.

இலங்கையின் ஆட்சி பீடத்துக்கு வந்த ஆட்சியாளர்கள் முதலில் அதி காரத்தை பிடிப்பதற்கு அல்லது பிடித்த அதிகாரத்தை தக்க வைப்பதற்கு பேரி னவாதப் பூதத்தைத் தான் எப்போதும் கட்டிப்பிடிக்கிறார்கள். அதுதான் இலங் கையின் சரித்திரம். அதுதான் இலங்கை தீபகற்பத்தை பீடித்திருக்கும் பெரும் துரதிஷ்டமும் கூட.

அதிகாரத்தைப் பெறுவதற்கும் தக்க வைப்பதற்கும் இனவாதத்தைக் கிளப்பும் இந்தப் பண்பு இப்போது 75 ஆண்டுகள் கடந்தும் இந்த தேசத்தின் தீராத பழியாய்த் தொடர்வது இந்த நாட்டின் தலைவிதி போலும்.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை யர்களுக்கு சேவைகளை வழங்குவதில் முன்னணியில் இருந்து சிறப்புக் கவனத் துடன் பணியாற்றுமாறும், எந்தவித பாகு பாடும் இல்லாமல் நியாயமாக செயல் படுமாறும் புதிய இராஜதந்திரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இலங்கைத் தூதரகத்தை, இலங்கை யர்கள் தமது இடமாக உணரும் வகையில் செயற்படுமாறு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டுக்கான தமது சேவையை செயற் திறன்மிக்க வகையில் மேற்கொள்ளு மாறும் தெரிவித்தார்.

வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்ப தற்கும், இலங்கையில் உள்ள தொழில் முனைவோர் வெளிநாட்டு சந்தை வாய்ப்பு களைக் கண்டறிய உதவுவதற்கும் தேவையான ஒருங்கிணைப்பு இராஜ தந்திர சேவையின் ஒரு பகுதியாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதன்படி, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் சுற்றுலாப் பயணி களை ஈர்ப்பது தூதுவரின் முக்கிய பொறுப்பாகும் என்றும், அதற்குத் தேவை யான ஆதரவை வழங்க அரசு தயாராக இருக்கின்றது என்றும் ஜனாதிபதி தெரி வித்தார்.

இலங்கையில் நடந்த சில சம்பவங் களால் தூதுவர்கள் கடந்த காலங்களில் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர் என்றும், தற்போதைய அரசு தூதுவர்களின் கௌர வத்தை பாதிக்கும் எவற்றையும் செய்யாது என்றும், எந்த நேரத்திலும் தூதுவர்க ளுக்கு அரசு துணை நிற்கும் என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

புதிய தூதுக் குழுத் தலைவர்களாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ் தானிகராக ஜீ. எம். கொலொன்னெ, பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ் தானிகராக ரியர் அட்மிரல் பிரெட் செனவிரத்ன, ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக எஸ். டீ. என்.யூ.சேனாதீர, அமெரிக்காவின் நியூயோர்க் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர பிரதிநிதியாக ஜயந்த ஜயசூரிய, கியூபாவுக்கான இலங்கைத் தூதுவராக ஆர்.எம்.மஹிந்த ரத்நாயக்க, ஜப்பானுக் கான இலங்கைத் தூதுவராக பேராசிரியர் பி. ஜனக் குமாரசிங்க, ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான இலங்கைத் தூது வராக பேராசிரியர் அருஷா கூரே ஆகி யோர் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செய லாளர் ரோஷன் கமகே ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் மாத்திரம் வீதி விபத்துக்களின் கார ணமாக சுமார் 965 பேர் உயிரிழந்துள் ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், நாடு தழுவிய ரீதியில் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 14 ஆம் வரையான காலப் பகுதியில் 1,842 பாரதூரமான சேதங் களை ஏற்படுத்தக் கூடிய வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளதுடன் குறித்த விபத்துகளில் சிக்கி சுமார் 965 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர சிறியளவிலான சேதம் மற்றும் பாதிப்புகளுடன் கூடிய 902 வீதி விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தரவுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கவனக் குறைவாகவும் அதிக வேகத் துடனும் வாகனம் செலுத்துதல், மது போதையில் வாகனம் செலுத்துதல், உரிய காலப்பகுதியில் வாகனங்களைப் பழுது பார்க்காமை மற்றும் வாகனம் செலுத்தும்போது சாரதிகளுக்கு ஏற்படும் தூக்கக் கலக்கம் போன்ற காரணங்களால் இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறு கின்றன என்றும் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

ஆகையால் தூரப் பயணங்கள் செல்லும் சாரதிகள் முறையாக நித்திரை கொண்டு வாகனம் செலுத்துவதுடன் மேலதிக சாரதி ஒருவரையும் பயணத் தின்போது இணைத்துக் கொள்வதன் மூலம் விபத்துக்களைத் தவிர்க்கலாம் என்றும் பொலிஸ் தலைமையகம் சுட்டிக்காட்டியுள்ளது.

"வெளியிடங்களுக்குச் சுற்றுலாவுக் காகச் செல்வோர் பழக்கமில்லாத புதிய வீதிகளில் வாகனம் செலுத்துவது அவதானம் மிக்கது. குறித்த வீதி பற்றிய அனுபவம் உடைய சாரதி ஒருவர் இருப் பதே நல்லது.

இந்நிலையில் நாடளாவிய ரீதியில் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸாரால் விசேட நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளதுடன், மேற்படி திட்டத்துக்கமைய சாரதிகளி டையே விபத்துக்கள் தொடர்பில் விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்படவுள்ளது." – என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.



# யாழ். பல்கலைக்கழகத்தில் ‘நினைவாயுதம்’ கண்காட்சி

(எஸ்.நிதர்ஷன்)

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தில் தமிழினப் படுகொலையை நினைவுகூரும் “நினைவாயுதம்” கண்காட்சி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வருகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் பிராதன வளாகத்தில் நடைபெற்று வரும் இந்தக் கண்காட்சி எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

தமிழினம் பட்ட அவலங்களையும், சோகங்களையும் அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் முகமாக இந்தக் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகளை அழைத்து வந்து கண்காட்சியைக் காண்பித்து, தமிழினத்தின் அவலங்களைப் பெற்றோர் எடுத்து கூற வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கோரியுள்ளனர்.









# ஜேர்மனியில் சர்வதேச விருது விழா













ஜேர்மனி, டாட்மெண்ட் நகரில் சர்வதேச விருது விழா அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவை ஜேர்மனி தமிழ் எம் தொலைக்காட்சி நிறுவனம் ஒழுங்கமைத்திருந்தது.

இதில் பிரதம விருந்தினராக ஜேர்மனி ஹம். காமாட்சி அம்மன் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ பாஸ்கர குருக்களும், கௌரவ விருந்தினராக கனடாவில் இருந்து வருகை தந்த "விழித்தெழு பெண்ணே" அறக்கட்டளை நிறுவுநர் திருமதி. சசிகலா நரேனும், சிறப்பு விருந்தினராக டாட்மெண்ட் நகர பிதாவும் கலந்துகொண்டனர்.

விருந்தினர்கள் விழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

பாஸ்கர குருக்கள் ஐயாவின் ஆசி உரையுடன் விருது விழா ஆரம்பமானது.

சுமார் 50 பன்முகக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

ஜேர்மனி நாட்டின் கலைஞர்கள் மட்டுமின்றி பிரான்ஸ், சுவிஸ், நெதர்லாந்து, மலேசியா, கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பன்முக கலைஞர்களும் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். ஏ.ஐ. தொழில்நுட்ப முறையில் இசையமைத்து பத்து பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழை ஒன்றும் இந்த விழாவில் வெளியிடப்பட்டது. இதனைக் கவிஞர் சிவனேசன் படைப்பாக்கம் செய்திருந்தார்.

50 ஆண்டுகால பன்முக சமூக கல்வி, கலைப் பணிகளுக்காக தமிழ் எம் தொலைக்காட்சி நிறுவுநர் மதிப்புக்குரிய என்.வி.சிவநேசனுக்கு குளோபல்பீஸ்அமெரிக்கபல்கலைக்கழகத்தால் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவம் அளிக்கப்பட்டது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வீரவன்ஸவின் கேள்விகள்

'பாம்பின் கால் பாம்பறியும்' என்பார்கள்.

அந்த வகையில் ஜே.வி.பியின் உண்மைமுகத்தைஅம்பலப்படுத்துகின்றார் அதன் முன்னாள் முகமான விமல் வீரவன்ஸ.

இன்று ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் கட்சியின் பிரதான பங்காளி கட்டமைப்பு ஜே.வி.பி. ஆகும். ஆரம்ப காலம் தொட்டு தன் அரசியலை ஜே.வி.பியில் முன்னெடுத்தவர் விமல் வீரவன்ஸ. கட்சியின் பிரதான தலைவர்களில் ஒருவராக புதிய மிலேனியத்தின் முதல் 15 ஆண்டுகள் இருந்தவர் அவர். ஜே.வி.பியின் பிரதான பேரினவாத முகமாக அந்த நேரத்தில் முன்னிறுத்தப்பட்டவர் அவர்தான். பிற்காலத்தில் ஜே.வி.பியில் இருந்து பிரிந்து தனி அரசியல் பாதையை வகுத்துக் கொண்டவர்.

முழு அளவில் பௌத்த - சிங்களப் பேரினவாதக் கட்டமைப்பாக தன்னை ஜே.வி.பி. முன்னுறுத்திய போது அதன் அந்தப் பேரினவாத முகத்தை முழு அளவில் வெளிப்படுத்தி, உறுதிப்படுத்தி நின்றவர் விமல் வீரவன்ஸதான்.

அவர் இப்போது இந்த ஆட்சி பீடத்தின் தகுதி குறித்துப் பிய்த்து உதறி இருக்கிறார்.

ஒரு உப்புப் பாக்கெட் 60 ரூபாயாக விலை நிர்ணயம் செய்ய 76 ஆண்டுகள் ஆனது என்றும், எனினும், 60 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக மாற வெறும் ஏழு மாதங்கள் மட்டுமே ஆனது என்றும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறியிருக்கின்றார்.

மற்ற அரசாங்கங்கள் எவ்வளவுதான் லஞ்சம் கொடுக்க முயன்றாலும், ஒரு பாக்கெட் உப்பு அல்லது ஒரு கிலோ அரிசிக்கு ஒருபோதும் லஞ்சம் கொடுத்ததில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கூறுகையில், தற்போதைய அரசாங்கத்தின் எந்தவொரு திறமையின்மைக்கும் முந்தைய அரசாங்கங்கள் மீது பழி சுமத்தப்படுவதாக அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

மோசடி மற்றும் ஊழல் இல்லாதது என்று கூறும் அரசாங்கம், உண்மையில் அவ்வாறு செய்வதன் மூலம் பணத்தை மிச்சப்படுத்தினால், ஒரு பாக்கெட் உப்பு, ஒரு கிலோ அரிசி மற்றும் ஒரு தேங்காய் எப்படி இவ்வளவு விலை உயர்ந்தவையாக இருக்க முடியும் என்று அவர் கேள்வி எழுப்பினார். அது முற்றிலும் சரியான கேள்விதான்.

எதிர்காலத்தில் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கவுள்ளன எனவும், இதுபோன்ற சூழ்நிலையில், பொது மக்களின் வாழ்க்கை மட்டுமல்ல, முழு தொழில்துறை அமைப்பும் பெரும் நெருக்கடிக்குத் தள்ளப்படும் என்றும் அவர் கூறினார். அது மிகையான கூற்றல்ல.

2024ஆம் ஆண்டின் இறுதிக்குள் லாபம் ஈட்டிய மின்சார சபை, 7 மாதங்களில் எப்படி நஷ்டத்தைச் சந்தித்திருக்க முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதனால் எதிர்காலத்தில் மின் கட்டணம் இன்னும் அதிகரிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியாக விமல் வீரவன்ஸவுடன் முரண்பட்டு நிற்கும் ஆளும் தரப்பு, அவர் எழுப்பியுள்ள இக்கேள்விகளுக்கு என்ன பதில் - நியாயம் - கூறப்போகின்றது?

# தன் தடுத்து வைப்பு சட்டவிரோதம் எனத் தெரிவித்து ரூ.10 கோடி இழப்பீடு கோரி பிள்ளையான் வழக்கு



(கனகராசா சரவணன்)

கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தன்னைக் கைது செய்து தடுத்து வைக்கக் குற்றப் புலனாய்வுத் துறை எடுத்த முடிவு, தனது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக தீர்ப்பளிக்கக் கோரி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக குற்றப் புலனாய்வுத் துறையின் விசேட புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி மாதவ குணவர்தன, குற்றப் புலனாய்வுத் துறையின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் இமேஷ முத்துமால, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் 8 ஆம் திகதி , தனது கட்சியின் அமைப்பு நடவடிக்கைகளில் பங்கேற்றுக் கொண்டிருந்தபோது, குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் குழு வந்து மட்டக்களப்புப் பகுதியில் தன்னைக் கைது செய்ததாகவும் –

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் போனமை தொடர்பாக தான் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனவும் –

குற்றப் புலனாய்வுத் துறையில் தூங்குவதற்குக் கூட தனக்கு போதுமான வசதிகள் இல்லை எனவும் –

சட்டத்தரணிகளை சந்திக்க போதுமான வாய்ப்பு தனக்கு இல்லை எனவும் –

இந்த முறையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் தனது அரசியல் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் – அவர் மனுவில் சுட்டிக் காட்டியுள்ளதுடன்

எந்தவொரு நியாயமான காரணமும் இல்லாமல் குற்றப் புலனாய்வுத் துறை தன்னைக் கைது செய்து தடுத்து வைத்தது தனது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகவும், தன்னைத் தடுத்து வைக்கப் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவை செல்லாததாக்கும் தீர்ப்பை பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுதாரர் உயர் நீதிமன்றத்தைக் கோரினார்.

தனது அடிப்படை உரிமைகளை மீறியதற்காக நூறு மில்லியன் ரூபாய் இழப்பீடு கோரியும் பிள்ளையான் தனது சட்டத்தரணிகள் மூலம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.




# தேசிய மக்கள் சக்திக்கு எதிரான குழுக்களுடன் ஒன்றிணைந்து செயற்பட ஐ.தே.க. தீர்மானம்

தேசிய மக்கள் சக்திக்கு எதிராக இருக்கின்ற அனைத்து குழுக்களுடனும் எதிர்காலத்தில் கலந்துரையாடி உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இணங்கியுள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடனான கலந்துரையாடல் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் நலீன் பண்டார கலந்துகொண்டிருந்தார்.

முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக் ஷ, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா, துமிந்த திசாநாயக்க, பொதுஜன ஐக்கிய முன்னணியின் அனுர பிரியதர்ஷன யாப்பா, தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில உள்ளிட்ட எதிர்க்கட்சிகளிலுள்ள பல உறுப்பினர்கள் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

# இலங்கை அரசாங்கம் - இந்தியாவின் எக்ஸிம் வங்கி இடையே இணக்கப்பாடு



கடன் மறுசீரமைப்பு செயன்முறையின் கீழ் இலங்கை அரசாங்கம் மற்றும் இந்தியாவின் எக்ஸிம் வங்கி இடையே இருதரப்பு திருத்தப்பட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.கடன் வசதி மற்றும் கடன் பெறுவதற் கான வசதி தொடர்பிலேயே இந்த இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப் பட்டுள்ளது.

இந்த கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படுகின்றமை இலங்கையின் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டில் முக்கியமான நடவடிக்கையாக அமையுமென நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி மற்றும் கடந்த 3 ஆம் திகதிகளில் இந்த இருதரப்பு திருத்தப்பட்ட உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இதனூடாக இந்திய அரசாங்கத்துடன் 930.8 மில்லியன் டொலர் பெறுமதியான 8 கடன் வசதிகள் மற்றும் 4 கொள்வனவு கடன் வசதிகள் தொடர்பான உடன்படிக்கைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

# அச்சுவேலி விவசாயிகளுடன் சிறீதரன் எம்.பி. கலந்துரையாடல்










அச்சுவேலி, பத்தைமேனி விவசாயிகள் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு எடுத்துரைகும் கலந்துரையாடல் ஒன்று நேற்று பத்தைமேனி பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது விவசாயிகள் கடந்த காலத்தில் தமக்கு உரமானியம், விவசாய உள்ளீடுகளுக்கான மானியம் போன்றவை வழங்கப்பட்டன. ஆனால், தற்போது எந்த மானியங்களும் வழங்கப்படுவதில்லை.

அத்துடன், வழங்கப்படும் விவசாய உள்ளீடுகள் கிருமிநாசினிகள் தரமற்றவை என்றும் இதனால் தமது உற்பத்திகளில் பாரிய மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடுவதாக விவசாயிகள் எடுத்துரைத்தனர்.

குறிப்பாக வெங்காய உற்பத்தி, உருளைக்கிழங்கு உற்பத்திகளின் போது விளைச்சலைப் பெறுகின்ற காலத்தில் அரசாங்கம் தடைகளின்றி வெளிநாடுகளில் இருந்து வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றை இறக்குமதி செய்கிறது.

இதனால் தமது உற்பத்திக்கு கேள்விகளற்றுப் போய் விடுகிறது. எனவே இவ் விடயங்களை நாடாளுமன்றில் எடுத்துரைக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்,

“விவசாயிகளின் உற்பத்திகள் பாதிப்படைவது போல் கடல்வளங்களும் வெளிநாட்டு இந்திய மீனவர்களினால் அழிக்கப்படுகிறது. இங்கு உங்களது உற்பத்திகளுக்கு கேள்விகளற்றுப் போகிறது. வெளிநாட்டு உற்பத்திகள் இறக்குமதி செய்யப்படுவதால் உள்ளூர் உற்பத்திகள் தேங்கி அழிவடைந்து செல்கிறது.

இந்த விடயங்கள் பற்றி நிச்சயமாக நாடாளுமன்றில் எடுத்துரைப்பேன். இவ்வாறு தான் கிளிநொச்சி விவசாயிகளின் பிரச்சினை தொடர்பில் விவசாய அமைச்சரிடம் கேள்வி நேரத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் இருவாரங்களில் பதில் அளிப்பதாக சபையில் வைத்துக் கூறி இன்று இரண்டு மாதங்களைக் கடந்து விட்டன, ஆனால், இது வரை அமைச்சர் பதில் தரவேயில்லை.” என்றார்.




# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் நான்காம் நாள் வல்வெட்டித்துறையில்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் நான்காம் நாள் நினைவேந்தல் வல்வெட்டித்துறையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை பஸ் நிலையத்தில் வைத்து உயிரிழந்தோரை நினைவு கூர்ந்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியும் காய்ச்சி பரிமாறப்பட்டது.

இந்த நினைவேந்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் செ.கஜேந்திரன், சட்ட ஆலோசகர் ந.காண்டீபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.









# பருத்தித்துறை முனை கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் நான்காம் நாள் நினைவேந்தல் நேற்று பருத்தித்துறை முனை கடற்கரையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.












# விளாவூர் யுத்தத்தில் மகுடம் சூடியது முனைக்காடு இராமகிருஸ்ணா அணி

மட்டக்களப்பு – விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகம் தனது 55 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ‘விளாவூர் யுத்தம்’ எனும் தொனிப்பொருளில் நடாத்திய அணிக்கு 11 போர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் முனைக்காடு இராமகிருஸ்ணா விளையாட்டுக் கழகம் மகுடம் சூடியுள்ளது.

கடந்த 12 ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளில் விளாவட்டவான் ராஜா விளையாட்டு மைதானத்தில் பகல், இரவு போட்டியாக நடைபெற்ற இந்த சுற்றுப் போட்டியில் 25 அணிகள் களம் கண்டிருந்தன.

இதில் முனைக்காடு இராமகிருஸ்ணா அணியும், காஞ்சிரங்குடா நாக ஒளி அணியும் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடத்தியிருந்த நிலையில் 01:00 என்ற கோல் கணக்கால் முனைக்காடு இராமகிருஸ்ணா வெற்றி பெற்று ராஜாவின் மரகத விழா கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

சுற்றுப் போட்டியில் இரண்டாம் இடத்தினை காஞ்சிரங்குடா நாக ஒளி அணியும், மூன்றாம் இடத்தினை முதலைக்குடா விநாயகர் அணியும், நான்காவது இடத்தினை கரவெட்டி ஆதவன் அணியும், சிறந்த நன்னடத்தை அணியாக பன்சேனை உதய ஒளி அணியும் பெற்றுக்கொண்டது.

இந்த போட்டியில் ராஜாவின் மரகத விழா நாயகனாக காஞ்சிரங்குடா நாக ஒளி அணியின் பந்து காப்பாளர் தெரிவு செய்யப்பட்டார்.

அத்தோடு, சிறந்த பந்துக் காப்பாளராக முனைக்காடு இராமகிருஸ்ணா அணியின் பந்துக் காப்பாளர் த. தனுஜனும், சிறந்த பின்கள வீரராக முதலைக்குடா விநாயகர் அணியின் வீரர் சி.விதுசனும், அதிக கோல்களை உட்செலுத்திய வீரராக கரையாக்கன்தீவு காந்தி அணி வீரர் டிலக்சனும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

சுற்றுப்போட்டியில் பெற்றிபெற்ற அணிகளுக்கு வெற்றிக் கிண்ணம் மற்றும் பணப்பரிசு வழங்கப்பட்டது.

ராஜா விளையாட்டுக் கழக தலைவர் இ. அபிலாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் செ.சண்முகராஜா, படுவான்கரை உதைபந்தாட்ட சங்கத்தின் பொருளாதார் ந.மணிவண்ணன், விளாவட்டவான் விநாயகர் வித்தியாலய அதிபர், விளாவட்டவான் ஆலய நிருவாக சபையின் பிரதிநிதிகள், பொது அமைப்பினர் கலந்துகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.






இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.



ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் ‘காலைக்கதிர்’ நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

22

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ந்து அரச படைகளினாலும், விழிப்புணர்வுக் குழுக்களின் பயங்கரவாதங்களாலும் நாட்டின் பல பாகங்களிலும் பல ஜே.வி.பி. தலைவர்கள், ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்கள். 1991 இன் முற்பகுதியில் அவர்களின் முக்கியமான தலைவர்கள், மத்திய குழுவின் மற்றும் அரசியல் குழுவின் உறுப்பினர்களாக இருந்தவர்களில் 19 பேர் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். மத்திய குழுவில் இருந்தவர்களில் சோமவன்ஸ அமரசிங்க ஒருவர்தான் பிடிபடாமல் தப்பித்து, நாட்டை விட்டு வெளியேறி, பின் அகதி அந்தஸ்துக்காக லண்டனிலும் இருந்து, வெளிநாடுகளில் ஜே.வி.பியை மீள் உருவாக்கி, பின் நாட்டுக்குத் திரும்பி, தலைமைப் பொறுப்பை ஏற்று, பெப்ரவரி 2014 வரை தலைமையிலிருந்து, கட்சியை விட்டு ஏப்ரல் 2015 இல் இருந்து விலகி, ஜனதா சேவக கட்சி (Peoples’ Servants Party) என ஒன்றை ஸ்தாபித்தாலும் 15 ஜுன் 2016 இல் காலமானார்.

இவரது தலைமையிலும் வழிநடத்தலிலும் வளர்ந்த இன்றைய ஜனாதிபதி, சோமவன்ஸ அமரசிங்கவைத் தொடர்ந்து கட்சித் தலைமைப் பொறுப்பை 2 பெப்ரவரி 2014 இல் 17 ஆவது தேசிய சம்மேளனத்தில் பெற்று, தேசிய மக்கள் சக்தியின் ஸ்தாபக உறுப்பினராக அதனோடு ஜே.வி.பியை இணைத்தார்.

பல ஆதரவாளர்களும், தலைவர்களும் பிடிபட்டாலும் அவர்களிடையே இருந்த கட்டுக்கோப்பின்மையால் நடவடிக்கைக்கு உகந்தவையான தகவல்கள் பல மாதங்களாக வெளிவரவில்லை. கடைசியில் டி.எம். ஆனந்தவின் கைதுக்குப் பின், அவர் வெளிப்படுத்திய தகவலில்தான் ஜே.வி.பி. கலஹாவிலிருந்த அரலியத் எஸ்டேட்டில் இருந்த வீடுகளைத்தான் தங்களது தலைமையமாகப் பாவிக்கிறது என்ற விவரம் பெறப்பட்டு, அவர்களுடைய கூட்டம் ஒன்று 11,12,13 நவம்பர் 1989 போடப்பட்டு நடைபெறும் என்ற மேலதிக தகவலும் கிடைக்கவே, 12ஆம் திகதி இரவுக்கு ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து, படையின் அவசர நடவடிக்கைக்கான பிரிவு (Rapid Deployment Unit) கலஹா நோக்கிச் சென்றது.

டி.எம்.பண்டார கூட்டத்துக்கு வராதமையால்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

சந்தேகம் கொண்ட சோமவன்ஸ அமரசிங்க கூட்டத்தை விரைவில் முடித்துப் பாதுகாப்புத் தேட வேண்டும் என விஜயவீரவுக்கு அறிவித்து ,12 ஆம் திகதி இரவு ஊரடங்கு அமலுக்கு வருவதால் ஜே.வி.பி. மத்திய குழு 12ஆம் திகதி மாலையே கூட்டங்களை முடித்து விட்டு, தங்கள் மறைவிடங்களுக்கு திரும்ப ஆயத்தங்கள் செய்தது. பியசிறி பெர்னாண்டோ, லலித் விஜயரத்ன, கமநாயக்க, விஜயவீர ஆகிய நால்வரும் எஸ்டேட்டை விட்டு ஒரு காரில் வெளியேற, சாந்த பண்டார தனியாகவும், பியதாஸ ரணசிங்கவும், சோமவன்ஸ அமரசிங்கவும் இன்னொரு வண்டியில் மாதிவெல என்னும் இடத்திற்குப் பணப்பட்டுவாடா சம்பந்தமாக வெளியேறினர்.

சோமவன்ஸ அமரசிங்க பணப் பட்டுவாடா முடித்து, இடைவெளியில் இறங்க, பியதாஸ ரணசிங்க கலஹா எஸ்டேட்டுக்குத் திரும்பி சென்று அன்றிரவு அவரும் எச்.பி.ஹேரத்தும் கைது செய்யப்பட்டனர். இந்த இருவர்தான் விஜயவீரவோடு அடிக்கடி தொடர்பில் இருந்தவர்கள். அவர்கள் தந்த வாக்குமூலத்தில் சிறிது மணித்தியாளங்களின் பின் விஜயவீர குடியிருந்த உலப்பனை எஸ்டேட்டில் அவர் கைது செய்யப்பட்டார். அவர் அங்கு மாறுவேடத்தில் தனது மனைவியுடனும் பிள்ளைகளுடனும் அந்த எஸ்டேட்டின் மேனேஜராக (Planter) மனேஜருக்குரிய வீட்டில்தான் குடியிருந்தார். கடைசி வரைக்கும் அவருக்கு உற்ற நண்பனான சோமவன்ஸ அமரசிங்கவின் ஏற்பாட்டில் விஜயவீர தனது மைத்துனர் என்ற அறிமுகங்களிலேயே இந்த ஏற்பாடுகள் நடந்திருந்தன. படையினர் அவரது வதிவிடத்தை முற்றுகையிட்ட போது, அவர் தான் சாதாரண குடிமகன், அவர்கள்(படையினர்) அத்துமீறிப் பிரவேசிக்கிறார்கள் எனவும், தனது பெயர் அத்தநாயக்கதான், எந்த விதமான பிரச்சினைகளும் இல்லாத சமாதானப் பிரியன் எனச் சாதிக்க, முற்றுகைக்குப் போன படைத் தளபதி அவரது நெற்றி பொட்டில் ரிவோல்வரை வைத்து, 'நீ அத்தநாயக்காவா, விஜயவீரவா?' எனக் கேட்க, அவர் பணிந்து தான் விஜயவீரதான், ஆனால் தனது மனைவி பிள்ளைகளுக்கு ஏதும் செய்ய வேண்டாம் என்று கெஞ்சி, அவர்களுடன் சென்றார்.

நடவடிக்கைகள் மையத்தில் (Operation Command Centre) இந்த முக்கிய பேர்வழியை பார்க்கப் பொலிஸ் உயர் அதிகாரிகள், படைத்தளபதிகள், அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின எல்லோரும் கூடி, அவரது விசாரணை பற்றித் தீர்மானித்து, வாக்குமூலம் பெற்று, அதனை தொலைக்காட்சி, வானொலி ஊடகங்களூடாக நேரடி அஞ்சல் செய்தனர். 1971 இல் விஜயவீர பிடிபட்டபோது அவரது வாக்குமூலம் 400 பக்கங்களுக்கு மேல், சீனச் சார்பு சண்முகதாசனிலிருந்து, தன்னைத் தவிர மற்ற எல்லோரையும் குற்றம் சுமத்திய மாதிரி இப்போது அமையவில்லை. மாறாக, சுருக்கமானதாகவும் ஜே.வி.பி. அங்கத்தினர்களையும் ஆதரவாளர்களையும் ஆயுதங்களைக் கைவிட்டு, சமாதானத்தைத் தேடுமாறு கேட்பதாகவும் அமைந்தது. அவரது வாக்குமூலம் ஒலிபரப்பப்பட்டது. பின்னர் அவர் இறந்தார். பலவித விளக்கங்கள் தரப்பட்டன. இராணுவத்தினர் அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரை இன்னொரு ஜே.வி.பியின் பலத்த ஆதரவாளர் வீட்டைக் காட்டுவதற்காகக் கூட்டிப் போக, அங்கு சில அங்கத்தினர் துப்பாக்கிகளால் இராணுவத்தினரைச் சுட்டு விஜயவீரவை மீட்க எத்தனிக்க அந்த சம்பவத்தில் என்கவுண்டரில் அவர் இறந்தார் எனப் பதிந்தனர். ஆனால் வேறு சில சாட்சிகள், அவரது வாக்குமூலம் ஒளிபரப்பானதின் பின் அவரை வெளியே ஓட சொன்னதாகவும், அப்பொழுது கால்களில் சுட்டு, முடமாக்கி, பின் தாக்கி, குற்றுயிருடன் உடலை பொரளை சுடுகாட்டு எடுத்துச் சென்று அங்கு எரித்தனர் எனவும் தகவல்கள் தந்தனர்.

அவரது பூதவுடல் கிடைக்காததால் ஜே.வி.பியினர் அவர் இறக்கவில்லை, பிடிபடவும் இல்லை என்ற செய்திகளை சில மாதங்களுக்குப் பரவ விட்டனர். என்றாலும் பின் ஆதாரங்கள் அவரது மறைவை பற்றித் திடமாக வெளிவர, அதனை ஏற்றுக் கொண்டாலும், எந்த விதத்தில் அவர் அழிக்கப்பட்டார் என்பது நிச்சயமற்றதாகவே உள்ளது.

ஜே.வி.பி. தலைவர்களும் விஜயவீரவும் கைது செய்யப்பட்ட முறைகளையும், கொலை செய்யப்பட்டதையும் பற்றி அப்பொழுது வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் "பிரபாகரன் இப்படியாகப் பிடிக்கப்பட்டு இறந்திருக்க மாட்டான். அவன் சண்டை பிடித்துச் சண்டையிலேயே

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

இறந்திருப்பான். கடைசி வரைக்கும் அவன் தன்னை யாரும் கைது செய்து துப்புவதற்கு இடம் அளித்திருக்க மாட்டான். இக்கட்டான நிலையில் இருந்தால் அவன் சயனைட் வில்லையை விழுங்கித் தன் உயிரை மாய்த்து இருப்பான்" எனக் கூறினார்.

ஒருவர் பிடிபட்ட பொழுது, உடனுக்குடன் அடுத்தவர் மிகவும் விரைவாக தகவல்களில் கைது செய்யப்பட்டனர். விடுதலை புலிகளைப் போலவே ஜே.வி.பி. மத்திய குழுவும் தங்களது அங்கத்தினர்களுக்கு சயனைட் குப்பிகளைக் கொடுத்திருந்தால் தலைவர்கள் இப்படி அழிக்கப்பட்டிருக்க மாட்டார்கள் என்ற கருத்து இருந்தது. ஆனால் பலர் மத்தியில் 'ஜே.வி.பி. தங்களது லட்சியத்திற்காகக் கொலைகளைச் செய்யத் தயாராக இருந்தது. ஆனால் அந்த லட்சியத்திற்காக தங்களைச் சாகக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை." என்ற அபிப்பிராயம் மேலோங்கி நின்றது.

சாந்த பண்டாரவுடன் ரவி ஜெயவர்த்தன பேசிய போது, அவர்கள் ஏன் சயனைட் வில்லைகளை பாவிப்பதில்லை எனக் கேட்டதற்கு, அவர் கூட தங்களுக்கு அவை தேவையானவையாகக் கருதவில்லை, அது குறித்து ஒரு பொழுதும் பேசப்பட்டதும் இல்லை என்றாராம்.

இவர்கள் இப்படி நகர்ப்புறங்களில் வசதியான மறைவிடங்களில் இருந்து பிடிபட்ட போது, அது விடுதலைப் புலிகளுக்கும் ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் தாங்கள் வன்னிப் பகுதிகளில் உள்ள காடுகளில் இருந்து இயங்க, தலைமையகத்தை வைத்துக்கொள்ள இவர்கள் ஏன் சிங்கராஜா போன்ற அடர்ந்த காடுகள் இருந்தும் அங்கு பதுங்கியிருந்து போராடவில்லை என்பது அவர்களுக்குப் புரியவில்லை. இப்படியான போக்குகளும் அவர்கள் மறைந்திருந்த காலங்களில் தேர்ந்தெடுத்த இருப்பிடங்களும், வாழ்வு முறைகளும் பல ஆய்வாளர்களை அவர்களது லட்சியப் பிடிப்புக்கான தியாகங்களை பற்றி ஆராயத் தூண்டி உள்ளன.

விஜயவீரவும் முக்கிய தலைவர்களும் கொல்லப்பட, மிகுந்திருந்தவர்கள் தாங்கள் தொடர்ந்து வன்முறையில் போராட்டத்தைத் தொடர வேண்டும் எனத் தீர்மானித்தனர். சாமான் பியசிறி பெர்னாண்டோ ஜே.வி.பி. தலைமைப் பொறுப்பு ஏற்க, லலித் விஜயரத்ன, காமினி விஜயகுணவர்த்தன போன்ற முக்கிய அங்கத்தினர் மத்திய குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சோமவன்ஸ அமரசிங்க தன்னை நிச்சயம் பிடிப்பார்கள் என்ற எண்ணத்தில் அவருக்கு இருந்த தொடர்புகளினால் பாஸ்போர்ட் பெற்று, மனைவியையும் குழந்தையும் இந்தியாவுக்கு அனுப்பி விட்டு, தானும் அங்கு போவதற்காக இந்தியாவிற்கான விசாவைப் பெற்றார். அது சிந்தூர் விவகாரம் போல சுவாரஸ்யமானது. தனக்கு அந்த விசாவைப் பெற்றுக் கொள்ள இந்திய தூதரகத்திற்கு போவதற்கு அவர் ஜே.வி.பி. ஆதரவாளரான மாத்தளையைச் சேர்ந்த விக்கி விக்கிரமசிங்கம் என்பவரின் உதவியை நாடியிருந்தார். விக்கி விக்கிரமசிங்கம், ஈஸ்வரன் பிரதர்ஸ் என்ற வியாபார நிலையத்தில் மொத்த விற்பனை மனேஜராகப் பணி புரிந்தமையால், அவர் சக ஊழியர்களின் உதவியில் சோமவன்ஸ அமரசிங்கவுக்கு தமிழர் போல் வேட்டி, மேலங்கி உடுத்து, சந்தனப் பொட்டும் சாத்தி, தமிழராகவே அழைத்துச் சென்றாராம். அந்தத் தோற்றத்திலும் விசாவைப் பெற்றுக் கொண்டாலும், விமான நிலையத்தைக் கடந்து விமானத்தில் செல்ல முயல்வது ஆபத்துக்கள் நிறைந்தது எனக் கருதி, பின்னர் பலப்பிட்டியவிலிருந்து விசைப்படகில்தான் வெளியேறினார். இந்தியாவிலிருந்து குடும்பத்துடன் தாய்லாந்து சென்று, அங்கு அகதி அந்தஸ்து கோரி, இத்தாலி, பிரான்ஸ் ஊடாக லண்டன் சென்று, அங்கிருந்து வெளிநாடுகளில் ஜே.வி.பியைப் புனரமைக்கும் வேலைகளில் ஈடுபட்டார்.

இடையில் சாமான் பியசிறி பெர்னாண்டோவும் கீர்த்தி விஜயசேகர போன்றோரும் படைகளால் கொல்லப்பட, சோமவன்ஸ அமரசிங்க நாட்டுக்குத் திரும்பி, ஜே.வி.பி. தலைமையை ஏற்று, அதை மீளக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தி, அதற்கான அரசியல் அடிப்படைகளை நாட்டிச் செயல்பட்டார்.

(தொடரும்)





# வடக்கில் 1080 ஏக்கரில் கடல் அட்டைப் பண்ணை அவற்றுள் பல அனுமதியின்றியும் இயங்குகின்றன!

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் 260 ஏக்கர் கடல் அட்டைப் பண்ணைகளில் 51 ஏக்கர் கடல் அட்டைப் பண்ணைகள் அனுமதி இன்றி இயங்குவது கண்டு கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கில் தற்போது 1,080 ஏக்கர் பரப்பளவில் கடல் அட்டைப் பண்ணைகள் இயங்குகின்றன என அரச திணைக்களம் உத்தியோகபூர்வமாக கூறினாலும் அனுமதியின்றியும் பல பண்ணைகள் இயங்குகின்றன. வடக்கில் இயங்கும் கடல் அட்டைப் பண்ணைகளிற்காக வருடாந்தம் சுமார் 45 லட்சம் கடல் அட்டை குஞ்சுகள் தேவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

45 லட்சம் குஞ்சுகளையும. உற்பத்தி செய்ய 3 உற்பத்திப் பண்ணைகள் அல்லைப்பிட்டி, நாவந்துறை, மன்னார் ஆகிய இடங்களில் இயங்குகின்றன. புதிதாக அல்லைப்பிட்டியில் நான்காவது பண்ணையும் அமைக்கப்படுகின்றது. இவை ஒவ்வொன்றிலும் மாதாந்தம் 40 ஆயிரம் குஞ்சுகள் உற்பத்தி செய்ய முடியும். வடக்கில் உள்ள 1080 ஏக்கர் கடல் அட்டைப் பண்ணைகளும் முழுமையாக செயல்படுவதானால் குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் குறைந்தது 6 பண்ணைகள் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டியில் இயங்கும் தனியார் பண்ணையில் 2024 ஆம் ஆண்டு 3 லட்சத்து 80 ஆயிரம் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

ஒரு ஏக்கர் பண்ணைக்கு வருடம் தோறும் 4 ஆயிரம் குஞ்சுள் வேண்டும். தற்போது

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 680 பண்ணைகளும், கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைதீவில் 88, நாச்சிக்குடாவில் 67, கிராஞ்சியில் 54 பண்ணைகளும் சட்டபூர்வ அனுமதியோடு இயங்குகின்றன. அனுமதிகள் இன்றி மேலதிகமாக 51 ஏக்கர் என மொத்தம் 260 பண்ணைகள் உள்ளன. இவ்வாறே மன்னார் மாவட்டத்திலும் 130 ஏக்கர் பண்ணைகள் உள்ளன.



கிளிநொச்சியில் அத்துமீறி ஓர் ஆண்டாக அமைக்கப்பட்டுள்ள கடல் அட்டைப் பண்ணைகள் தொடர்பில் சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுப்பதற்கு

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், நெக்டா மற்றெம் பிரதேச செயலகம் என்பவற்றிற்கு அதிகாரம் உண்டு. இவ்வாறு அதிகாரம்கொண்ட நிறுவனங்களில் பிரதேச செயலகங்கள் முதலில் எழுத்தில் அறிவித்து அதன் பின்பு எச்சரிக்கை அறிவித்தல் காட்சிப் படுத்திய பின்பே வழக்கிட முடியும் எனவும், கரையோரப் பாதுகாப்பு நிறுவனம் நேரடியாக வழக்குத் தாக்கல் செய்யவும் நெக்டா நிறுவனமானது எந்தவொரு அறிவித்தலோ அல்லது சட்ட நடவடிக்கை இன்றி அனைத்தையும் எந்தவேளையும் அகற்றும் அதிகாரம்கொண்டுள்ள போதும் அனைவரும் மௌனம் காக்கின்றனர் என உள்ளூர் மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

உள்ளூர் மீனவர்களின் குற்றச் சாட்டுத் தொடர்பில் பூநகரி பிரதேச செயலாளர் அகிலனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது –

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 52 பேர் அனுமதி இன்றி கடல் அட்டைப் பண்ணை அமைத்துள்ளனர் என அடையாளம் காணப்பட்டு, அதில் 49 பேருக்கு எதிராக முன் அறிவித்தல் படிவம் (அ படிவம்) விநியோகிக்கப்பட்டு, அறிவித்தலும் ஒட்டப்பட்டுவிட்டது. இவர்களிற்கு எதிராக ஜுன் மாதத்திற்கு முன்பு வழக்குத் தாக்கல் செய்யப்படும்– – எனத் தெரிவித்தார்.

இதேநேரம் முழு அதிகாரம்கொண்ட நெக்டா நிறுவனம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என அதன் யாழ்ப்பாணம் இணைப்பாளர் நிரூபராஜ்சை தொடர்பு கொண்டு கேட்டபோது –

நாமும் சகல விவரங்களையும் சேகரித்து உரிமையாளர்களையும் இனம் கண்டுகொண்டோம். அடுத்த மாதம் நேரடியாக நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

கடல் அட்டைப் பண்ணை தொடர்பில் தொடர்ச்சியாக குரல்கொடுத்து வரும் வடமாகாண மீனவ அமைப்பின் பிரதிநிதி அன்னராசாவைத் தொடர்புகொண்டு இது தொடர்பில் கேட்டபோது –

இரண்டு ஆண்டுகளாக சட்ட விரோதமாக அரசிற்கு சேரவேண்டிய குத்தகைப் பணத்தைக்கூட செலுத்தாமல் இவை இயங்கும்போது தூங்கிய அதிகாரிகள் அவர்கள் போட்ட கடல் அட்டைப் பண்ணைகளின் அட்டை வளர்ச்சி அடைந்து சந்தைப்படுத்தி இலாபமீட்டிய பின்பு ஒப்புக்கு நடவடிக்கை எடுக்கின்றனர். – என்றார்.







# ஏ.சி.பாம் கிராமத்தை உடன் மீள்குடியேற்றுங்கள்! தவறினால் நாங்களே குடியேற்றத்தைச் செய்வோம்

## எச்சரிக்கிறார் ரவிகரன் எம்.பி.

(பா.சதீசன்)

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிரதேசெயலாளர் பிரிவிற்குட்பட்ட, ஏ.சி.பாம் கிராம மக்களை உடனடியாக மீள் குடியமர்த்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்துள்ள வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அவ்வாறு குடியேற்றத் தவறினால் குறித்த பகுதியில் மக்களோடு இறங்கி துப்பரவுசெய்து ஏ.சி.பாம் கிராம மக்களை குடியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்தார்.

அதேவேளை ஏ.சி.பாம் கிராமத்தை நிலஅளவைத் திணைக்களம் அளவீடுசெய்த 1979ஆம் ஆண்டு வரைபடம் இருக்கும்போது, குறித்த பகுதி தண்டுவான் ஒதுக்கக்காடு என 2012ஆம் ஆண்டு வர்த்தமானி வெளியிடப்பட்டிருப்பது சட்டமீறல் செயற்பாடு எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

கமுல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியமர்த்தப்படாத பூர்வீகத் தமிழ் கிராமங்களான ஏ.சி.பாம், தண்ணிமுறிப்பு ஆகிய பகுதிகளுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று களவிஜயம் மேற்கொண்டிருந்தார். அத்தோடு வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வீமன்கமம் பகுதியில் அமைந்துள்ள விவசாய நிலங்களையும் இதன்போது அவர் பார்வையிட்டார். அப்பகுதிகளைச் சேர்ந்த மக்களோடும் கலந்துரையாடினார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தண்டுவான் கிராமத்திற்கு அண்மையிலுள்ள ஏ.சி பாம் என்னும் பூர்வீகத் தமிழ்க் கிராம் இதுவரையில் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

இந்நிலையில் அப்பகுதிமக்களின் அழைப்பையேற்று அந்தப் பகுதிக்கு களவிஜயமொன்றினை மேற்கொண்டு குறித்த ஏ.சி.பாம் கிராம மக்களின் நிலைமைகள் குறித்து ஆராய்ந்துள்ளேன்.

அந்தவகையில் அசாதாரண நிலைமைகாரணமாக கடந்த 1997ஆம் ஆண்டு அப்பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்த சுமார் 46குடும்பங்களைச்சேர்ந்த தமிழ் மக்கள் தமது வாழிடங்களிலிருந்து இடம்பெயர்ந்தனர். இந்நிலையில் தற்போதுவரையில் குறித்த ஏ.சிபாம் கிராமத்தைச்சேர்ந்த தமிழ்மக்கள் மீள்குடியேற்றம்செய்யப்படவில்லை.

இருப்பினும் குறித்த கிராமத்தில் மக்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. அந்தவகையில் சிதைவடைந்தநிலையில் மக்கள் வாழ்ந்த வீடுகள் காணப்படுவதுடன், வேலிகளுக்காக நடப்பட்ட சீமைக் கிழுவைமரங்களும், மாமரம், தோடை உள்ளிட்ட பலன்தரும் மரங்கள் பலவும் காணப்படுகின்றன.

இத்தகைய சூழலில் கடந்த 2012ஆம் ஆண்டு குறித்த ஏ.சி பாம் கிராமம் தண்டுவான் ஒதுக்கக்காட்டுப் பகுதியாக வர்த்தமானிமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், வனவளத்திணைக்களம் அந்தப் பகுதியை ஆக்கிரமித்துள்ளது.

இந்நிலையில் கடந்த 1979ஆம் ஆண்டு நிலஅளவைத் திணைக்களத்தால், இந்தப் பகுதி அளவீடுசெய்யப்பட்டு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு நிலஅளவைத் திணைக்களத்தால் அளவீடுசெய்யப்பட்டமைக்கான Top of PP66 என்னும் இலக்க வரைபடம் எம்மிடமுள்ளது.

தொடர்ச்சி▼









# ஏ.சி.பாம் கிராமத்தை உடன் மீள்குடியேற்றுங்கள்! தவறினால் நாங்களே குடியேற்றத்தைச் செய்வோம்

## எச்சரிக்கிறார் ரவிகரன் எம்.பி.

தொடர்ச்சி▲

இந்தக் காணிகள் தமிழ்மக்களுடையவை என்பதற்கு ஆதாரமாக, 1979ஆம் ஆண்டு நில அளவை செய்யப்பட்ட வரைபடம் இருக்கும்போது, இப்பகுதி தண்டுவான் ஒதுக்கக் காடு என எவ்வாறு வர்த்தமானி வெளியிடமுடியும்?

ஏற்கனவே நீண்டகாலத்திற்கு முன்னர் நிலஅளவைத் திணைக்களத்தால் அளவீடுசெய்யப்பட்டு வரைபடம் உள்ள இடத்தை, இவ்வாறு ஒதுக்கக்காடு என்று வர்தமானி வெளியிடுவது சட்டமீறல் செயற்பாடாகும்.

தமிழ்மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடங்கள் இவ்வாறுதான் அபகரிப்புச் செய்யப்படுகின்றன. இந்நிலையில் தங்களுடைய பூர்வீக வாழிடத்தில் மீள் குடியேற்றுமாறு இக்கிராமக்கள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்த மக்களை அவர்களது சொந்த இடமான ஏ.சி பாம் கிராமத்தில் மீள் குடியேற்றுமாறு தொடர்ச்சியாக உரியவர்களை கேட்டுக்கொண்டு மாத்திரம் இருக்கமுடியாது. இந்த இடங்களில் நாம் மக்களோடு இறங்கி, மக்களுடைய இடங்களைத் துப்பரவுசெய்து, மக்களைக் குடியேற்றவேண்டிய நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மக்களுடைய காணிகள் மக்களிடமே சேரவேண்டும். இவ்வாறு வனவளத் திணைக்களமோ அல்லது ஏனைய அரச திணைக்களங்களோ மக்களின் காணிகளை அபகரிக்கும் சட்டமீறல் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

இதேபோல் தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாமல் காணப்படுகின்றது. அப்பகுதி மகமகளும் தமது பகுதிகளையும் மீள்குடியேற்றுமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்படாமலுள்ள தமிழ் மக்களின் பூர்வீக இடங்களை இந்த அரசாங்கம் மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுதொடர்பிலே நாடாளுமன்றிலும் பேசுவதுடன், ஜனாதிபதி, பிரதமர், உரிய அமைச்சுக்களின் கவனத்திற்கும்கொண்டுவந்து இவ்வாறு மீள் குடியேற்றப்படாமலுள்ள பகுதிகளை மீள்குடியேற்றுவதுதொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

அத்தோடு வீமன் கமம் பகுதியில் வனவளத்திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 10பேருக்குரிய, 20ஏக்கர் விவசாயக்காணிகளையும் விடுவிப்பது தொடர்பிலும் கவனஞ்செலுத்தப்படும் – என்றார்.







# ராஜாங்கனைப் பிரதேசத்தில் கொள்ளைக் குழுவினர் கைது

(உடப்பு க.மகாதேவன்)

மோட்டார் சைக்கிள்களில் செல்லும் பெண்களிடமிருந்து தங்க நகைகளை அபகரித்துச் சென்றிருந்த கும்பலொன்றை தம்புத்தேகம பொலிஸ் நிலைய குற்றப்பிரிவு அதிகாரிகள் நேற்றுக் கைது செய்தனர்.

ராஜாங்கனை பிரதேசத்தில் பக்க கண்ணாடி மற்றும் இலக்கத்தகடுகள் இல்லாமல் பயணித்த மோட்டார் சைக்கிள் குறித்து சந்தேகமடைந்த பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்ட போது, அது திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பது தெரியவந்தது.

அதன்படி, மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டமையோடு, அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட நீண்ட விசாரணையில் பெண் உள்ளிட்ட மேலும் மூன்று சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு கூர்மையான ஆயுதங்கள், திருடப்பட்ட - இலக்கத் தகடுகள் மற்றும் பக்க கண்ணாடிகள் இல்லாத - மூன்று மோட்டார் சைக்கிள்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் வீதியில் மோட்டார் சைக்கிள்களில் செல்லும் பெண்களிடமிருந்து தங்க நகைகளைப் பறிக்க மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தி வந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைவாக, அனுராதபுரம், கல்கமுவ, வாஹல்கட, கஹடகஸ்திகிலிய மற்றும் தலாவ ஆகிய பகுதிகளில் இருந்து திருடப்பட்ட மூன்று மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தங்க நகைகள் ஐந்தும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் தம்புத்தேகம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

தம்புத்தேகம பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# ஆலையடிவேம்பில் புதனன்று பௌர்ணமி தினத்தில் மது விற்பனை, சூதாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது



(கனகராசா சரவணன்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பௌர்ணமி தினத்தில் சட்டவிரேத மதுபான விற்பனையில் ஈடுபட்ட வீடு ஒன்றை நேற்று முன்தினம் புதன் கிழமை பொலிஸார் முற்றுகையிட்டனர். இதன்போது சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் மற்றும் சூதாட்டத்தில் ஈடுபட்ட 3 பேர் உட்பட 4 பேரை கைது செய்ததனர். கால் போத்தல்கள் கொண்ட 75 மதுப் புட்டிகளையும் தாங்கள் மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய புதன் இரவு அந்தப் பிரதேசத்தில் பஸ்தியான் வீதியிலுள்ள வீடு ஒன்றை அக்கரைப்பற்று பொலிஸார் சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர். இதன் போது அங்கு சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஒருவரைக் கைது செய்தனர். அவரிடமிருந்து 75 கால் போத்தல்கள் கொண்ட மதுபானங்கள் மீட்கப்பட்டன.

அதேவேளை குறித்த வீட்டில் சூதாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரைக் கண்டு தப்பி ஓடிய நிலையல் அங்கு சூதாட்டத்தில் ஈடுபட்ட அம்பாறையைச் சேர்ந்த 3 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இதேவேளை குறித்த வீட்டில் நீண்ட காலமாக சட்டவிரோதமாக சூதாட்டம் மற்றும் மதுபான விற்பனை போன்ற பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் வீட்டின் உரிமையாளர், தாம் பொலிஸாரின் உளவாளி எனத் தெரிவித்து பிரதேசத்தில் மக்களை அச்சுறுத்தி பல்வேறு அடாவடிகள் மற்றும் குற்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றார் எனவும், அவருக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்காதிருக்கின்றனர் எனப் பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் அதிகாரிகள் பலருக்கு ஒரே நாளில் அதிரடி இடமாற்றம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் 22 பேருக்கு வடக்கு மாகாண ஆளுநரால் அதிரடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

19 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள் என 21 பேருக்கு இந்த கட்டாய இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதே நேரம் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜெகாநந்தன் அப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, உடனடியாக கல்வி அமைச்சில் பொறியியலாளராக இருந்த அபிராமி வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தன் தடுத்து வைப்பு சட்டவிரோதம் எனத் தெரிவித்து ரூ.20 கோடி இழப்பீடு கோரி பிள்ளையான் வழக்கு

**(கனகராசா சரவணன்)**

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தன்னைக் கைது செய்து தடுத்து வைக்கக் குற்றப் புலனாய்வுத் துறை எடுத்த முடிவு, தனது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக தீர்ப்பளிக்கக்கோரி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக குற்றப் புலனாய்வுத் துறையின் விசேட புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி மாதவ குணவர்தன, குற்றப் புலனாய்வுத் துறையின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் இமேஷ் முத்துமால, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் 8 ஆம் திகதி , தனது கட்சியின் அமைப்பு நடவடிக்கைகளில் பங்கேற்றுக் கொண்டிருந்தபோது, குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் குழு வந்து மட்டக்களப்புப் பகுதியில் தன்னைக் கைது செய்ததாகவும் –

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் போனமை தொடர்பாக தான் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனவும் –

குற்றப் புலனாய்வுத் துறையில் தூங்குவதற்குக் கூட தனக்கு போதுமான வசதிகள் இல்லை எனவும் –

சட்டத்தரணிகளை சந்திக்க போதுமான வாய்ப்பு தனக்கு இல்லை எனவும் –

இந்த முறையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் தனது அரசியல் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் – அவர் மனுவில் சுட்டிக் காட்டியுள்ளதுடன்

எந்தவொரு நியாயமான காரணமும் இல்லாமல் குற்றப் புலனாய்வுத் துறை தன்னைக் கைது செய்து தடுத்து வைத்தது தனது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகவும், தன்னைத் தடுத்து வைக்கப் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவை செல்லாததாக்கும் தீர்ப்பை பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுதாரர் உயர் நீதிமன்றத்தைக் கோரினார்.

தனது அடிப்படை உரிமைகளை மீறியதற்காக நூறு மில்லியன் ரூபாய் இழப்பீடு கோரியும் பிள்ளையான் தனது சட்டத்தரணிகள் மூலம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.





# நெடுந்தீவு ‘குமுதினி’ படுகொலையின் 40 வது ஆண்டு நினைவேந்தல் நேற்று

நெடுந்தீவு குமுதினி படுகொலையின் 40 வது ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் காலை நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள குமுதினி படுகொலை நினைவுத் தூபியில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி நிகழ்வு உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவுகளை சுமந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியும்,– உயிரிழந்தவர்களின்நினைவாகமரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

1985ம் ஆண்டு நெடுந்தீவு மாவிலித்துறை முகத்தில் இருந்து புங்குடுதீவு குறிகாட்டுவான் நோக்கி குமுதினி படகில் மக்கள் பயணித்த போது கடற்படையினரால் குழந்தை, பெண்கள் அடங்கலாக உட்பட 36 பேர் நடுக்கடலில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

நினைவேந்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நெடுந்தீவு பங்குத்தந்தை உள்ளிட்ட மத தலைவர்கள், உயிழந்தவர்களின் உறவுகள், பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.







# பாகிஸ்தானின் அணு ஆயுதங்களை சர்வதேசம் கண்காணிக்க வேண்டும்

## பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வலியுறுத்தல்



பாகிஸ்தானின் அணு ஆயுதங்களை சர்வதேச அணுசக்தி முகமையின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டதை அடுத்து, 'ஒபரேஷன் சிந்தூர்' என்ற இராணுவ நடவடிக்கையை இந்தியா தொடங்கியது. இந்த நடவடிக்கையில் இந்திய ராணுவம் வெற்றி பெற்றதை அடுத்து, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று ஸ்ரீநகருக்குச் சென்றார்.

பஹல்காம் தாக்குதல் மற்றும் அதற்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்குப் பிறகு முதல்முறையாக ஸ்ரீநகர் சென்ற ராஜ்நாத் சிங், ஸ்ரீநகரின் பதாமி பாக் கண்டோன்மென்ட்டில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஜம்மு - காஷ்மீர் பகுதியில் வீசப்பட்ட பாகிஸ்தான் குண்டுகளை அமைச்சர் ஆய்வு செய்தார். சில சிதைவுகளையும் அவர் பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் ராஜ்நாத் சிங் கருத்து தெரிவிக்கையில், "பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதிகளை எதிர்த்துப் போராடிய துணிச்சலான வீரர்களின் உச்சபட்ச தியாகத்துக்கு முதலில் நான் தலை வணங்க விரும்புகிறேன். அவர்களின் நினைவுகளுக்கு நான் மரியாதை செலுத்துகிறேன்.

பஹல்காமில் கொல்லப்பட்ட அப்பாவி பொதுமக்களுக்கும் நான் மரியாதை செலுத்துகிறேன். காயமடைந்த வீரர்களின் துணிச்சலுக்கும் நான் வணக்கம் செலுத்துகிறேன். மேலும், அவர்கள் விரைவில் குணமடைய கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறேன்.

இதுபோன்ற பாதகமான சூழ்நிலைகளுக்கு மத்தியில் உங்களுடன் இருப்பதில் நான் பெருமைப்படுகிறேன். பிரதமர் நரேந்திர மோடியின் திறமையான தலைமை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், ஆபரேஷன் சிந்தூரின் போது நீங்கள் அனைவரும் செய்தவற்றிற்காக முழு தேசமும் பெருமை கொள்கிறது. உங்கள் பாதுகாப்பு அமைச்சராக இருப்பதற்கு முன்பு, நான் ஒரு இந்திய குடிமகன். பாதுகாப்பு அமைச்சராக இருப்பதோடு மட்டுமல்லாமல், ஒரு இந்திய குடிமகனாக உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

நான் இங்கு ஒரு தபால்காரராக உங்கள் மத்தியில் வந்து நாட்டு மக்களின் செய்தியைக் கொண்டு வந்துள்ளேன். அவர்களின் செய்தி 'நாங்கள் அனைவரும் உங்களைப் பற்றி பெருமைப்படுகிறோம்' என்பதாகும். ஒபரேஷன் சிந்தூர் என்பது வெறும் ஒரு நடவடிக்கையின் பெயர் மட்டுமல்ல, அது எங்கள் உறுதிப்பாடு. இது போன்ற ஒரு உறுதிப்பாட்டின் மூலம் இந்தியா பாதுகாப்பை மட்டுமல்ல, தேவைப்படும்போது வலுவான முடிவுகளையும் நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைக் காட்டியது.

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு, பாகிஸ்தான் மற்றும் பயங்கரவாதிகள் மீது தங்கள் கோபத்தை வெளிப்படுத்திய ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கும் நான் வணக்கம் செலுத்துகிறேன். எதிரிகளை அழித்த அந்த சக்தியை உணர நான் இங்கே இருக்கிறேன். எல்லையில் இருந்த பாகிஸ்தானிய பயங்கரவாத முகாம்கள் மற்றும் பதுங்கு குழிகளை நீங்கள் அழித்த விதத்தை, எதிரிகளால் ஒருபோதும் மறக்க முடியாது என்று நினைக்கிறேன்.

இவ்வளவு பொறுப்பற்ற மற்றும் முரட்டுத்தனமான நாட்டின் கைகளில் அணு ஆயுதங்கள் பாதுகாப்பாக இருக்குமா என்று நான் முழு உலகத்தையும் கேட்கிறேன். பாகிஸ்தானின் அணு ஆயுதங்களை சர்வதேச அணுசக்தி முகமையின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்."என்றார்.

# காஷ்மீர், புல்வாமா என்கவுன்ட்டரில் 3 பயங்கரவாதிகள் சுட்டுக் கொலை



காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் உள்ள அவந்திபோராவின் டிரால் பகுதியில் நேற்று இந்திய பாதுகாப்புப் படையினர் நடத்திய என்கவுன்டரில் 3 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். துப்பாக்கிச் சண்டையின்போது, பயங்கரவாதிகள் ஒரு கொட்டகையில் பதுங்கியிருக்கும் காணொலிகள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன.

ஜம்மு - காஷ்மீரின் அவந்திபோராவில் உள்ள டிராலின் நாடர் பகுதியில் நேற்று முன்தினம் இந்திய இராணுவம், ஜம்மு - காஷ்மீர் பொலிஸார் மற்றும் மத்திய ரிசர்வ் பொலிஸ் படை இணைந்து ஒரு கூட்டு நடவடிக்கையைத் தொடங்கின. இந்த நடவடிக்கையில் மூன்று தீவிர பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இது குறித்து வெளியாகியுள்ள காணொலியில், பயங்கரவாதிகளில் ஒருவர் கையில் துப்பாக்கியுடன் ஒரு கொன்கிரீட் தூணின் பின்னால் பதுங்கியிருக்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. தொலைவில் இருந்து படம்பிடிக்கப்பட்ட மற்றொரு காணொலியில், பயங்கரவாதிகள் உடைந்த கொட்டகைக்குள் பதுங்கியிருக்கும் காட்சிகள் பதிவாகியுள்ளன.

இது கடந்த 48 மணி நேரத்தில் காஷ்மீரில் நடந்த இரண்டாவது மோதலாகும்.







# காசாவில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்!

## 40 பேர் உயிரிழப்பு

காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர் என அந்த நாட்டு வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காசாவில் வெவ்வேறு பகுதிகளில் இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

தாக்குதலில் கொல்லப்பட்ட 40 பேரில், சுமார் 36 பேரின் சடலங்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

# எங்களின் அணு ஆயுதங்கள் தொடர்பில் இந்தியா கூறியது விரக்தியின் வெளிப்பாடு

## பாகிஸ்தான் தெரிவிப்பு




பாகிஸ்தானின் அணு ஆயுதங்களை சர்வதேச அணுசக்தி முகமையின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் கருத்துக்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவு அலுவலக செய்தித் தொடர்பாளர் ஷஃப்கத் அலி கான் வெளி யிட்டுள்ள அறிக்கையில்,

“இந்தக் கருத்து பொறுப்பற்றது. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான பாகிஸ்தானின் பாரம்பரிய பாதுகாப்பு வழிமுறைகள் மீது இந்தியாவுக்கு உள்ள ஆழ்ந்த விரக்தியையே இது வெளிப்படுத்துகிறது. ‘அணுசக்தி அச்சுறுத்தல்’ இருப்பதாக இந்தியா கூறுவது, அது தனக்குத்தானே ஏற்படுத்திக் கொள்ளும் துயரம்.

இந்திய பாதுகாப்பு அமைச்சரின் கருத்துகள், சர்வதேச அணுசக்தி முகமை போன்ற ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு நிறுவனத்தின் ஆணை மற்றும் பொறுப்புகள் குறித்த அவரது அறியாமையையே காட்டுகிறது. இந்தியாவில் அணு மற்றும் கதிரியக்கப் பொருட்கள் திருடப்படுகின்றன அல்லது சட்டவிரோதமாக கடத்தப்படுகின்றன. இது குறித்து சர்வதேச அணுசக்தி முகமை மற்றும் சர்வதேச சமூகம் கவலைப்பட வேண்டும். அணுசக்தி மற்றும் பிற கதிரியக்கப் பொருட்களின் பாதுகாப்புக்காக இந்தியா எடுத்த நடவடிக்கைகள் என்ன?” என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

# பாகிஸ்தான் அணு உலைகளில் கதிர்வீச்சு கசிவுகள் இல்லை

## சர்வதேச அணுசக்தி முகமை உறுதி

பாகிஸ்தானில் உள்ள எந்த ஓர் அணு உலையில் இருந்தும் கதிர்வீச்சு கசிவு இல்லை என்று உலகளாவிய அணுசக்தி கண்காணிப்பு அமைப்பான சர்வதேச அணுசக்தி முகமை உறுதிபட தெரிவித்துள்ளது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை அடுத்து, பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களை குறிவைத்து கடந்த 7 ஆம் திகதி ‘ஒபரேஷன் சிந்தூர்’ என்ற பெயரில் இந்திய பாதுகாப்புப் படை தாக்குதல் நடத்தியது. இதில், 100 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என இந்திய இராணுவம் தெரிவித்தது. இந்த தாக்குதலில், பயங்கரவாத கட்டமைப்புகள் பலத்த இழப்பைச் சந்தித்தன.

இதையடுத்து, இந்தியாவின் இராணுவ நிலைகளை குறிவைத்தும், பொதுமக்களை குறிவைத்தும் பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக, பாகிஸ்தான் இராணுவ நிலைகளை குறிவைத்து இந்தியா தாக்குதல் நடத்தியது. 4 நாள்கள் நடந்த இந்த இராணுவ மோதல், பாகிஸ்தான் டி.ஜி.எம்.ஓ.வின் கோரிக்கையை ஏற்று கடந்த 10 ஆம் திகதி முடிவுக்கு வந்தது.





எனினும், இந்த மோதலின்போது பாகிஸ்தானின் அணுசக்தி நிலையங்கள் அமைந்துள்ள கிரானா மலைகளை இந்தியா தாக்கியதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த தாக்குதலால், அணு உலை பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றும் பலர் சமூக ஊடகங்களில் கருத்து தெரிவித்தனர். அதேநேரத்தில், பாகிஸ்தானின் அணு உலைகளை குறிவைத்து இந்தியா தாக்குதல் நடத்தவில்லை என்று விமானப் போக்குவரத்து இயக்குநர் ஜெனரல் ஏர் மார்ஷல் ஏ.கே.பாரதி தெரிவித்தார்.

கடந்த 12 ஆம் திகதி செய்தியாளர்களிடம் பேசிய அவர், “கிரானா மலைப் பகுதியில் அணுசக்தி நிலையங்கள் இருப்பதாக நீங்கள் (செய்தியாளர்) கூறியதற்கு நன்றி. ஆனால், அங்கு அணுசக்தி நிலையங்கள் இருப்பதாக எங்களுக்குத் தெரியாது. அங்கே என்ன இருந்தாலும் சரி, அது எங்கள் இலக்கு அல்ல. நாங்கள் கிரானா மலைகளைத் தாக்கவில்லை” என்று கூறினார்.

இந்நிலையில், பாகிஸ்தானில் உள்ள எந்தவொரு அணுசக்தி நிலையத்தில் இருந்தும் கதிர்வீச்சு கசிவு அல்லது வெளியீடு எதுவும் இல்லை என்று உலகளாவிய அணுசக்தி கண்காணிப்பு அமைப்பான சர்வதேச அணுசக்தி முகமை தெரிவித்துள்ளது. அதன் செய்தித் தொடர்பாளர் அளித்த பேட்டியில், “சர்வதேச அணுசக்தி முகமைக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில், பாகிஸ்தானில் உள்ள எந்தவொரு அணுசக்தி நிலையத்தில் இருந்தும் கதிர்வீச்சு கசிவு அல்லது வெளியீடு எதுவும் இல்லை” என்று தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -16.05.2025




சுயமுயற்சியை சார்ந்திருங்கள். அதனால் தன்னம்பிக்கை அதிகரித்து பல ஆச்சரியங்களை ஏற்படுத்தலாம். உங்கள் செயல்களை சாமார்த்தியமாக கையாளுங்கள்.

பணிச்சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் மீது நம்பிக்கை வைத்து பணியாற்றுங்கள். நெருக்கமானவர்களாக இருப்பவர்களைக் கூட கண்மூடித்தனமாக நம்பாதீர்கள்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உறவில்இணக்கம் கெடும். கவனமாக இருக்க வேண்டும்

வரவும் செலவும் இணைந்து காணப்படும். வரவுக்கும் செலவுக்கும் இடையிலான இடைவெளி உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

தலைவலி, கால்களில் வலி, மற்றும் முதுகுவலி போன்ற உபாதைகளால் வருத்தப்படுவீர்கள்.யோகா பழகவும்.




உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் வேண்டும். நன்றாக திட்டமிட வேண்டியது அவசியம்.

பணிச்சூழல் மிதமான பலன்களையே அளிக்கும். பணிகளின் சுமை அதிகமாக காணப்படும். அதை சமாளிக்கும் வழிமுறைகளைத் தேடுவீர்கள்.

உறவில் இணக்கமான நிலை இருக்காது. நீங்கள் அனுசரித்து நடக்க வேண்டும்.

நிதிக்கான அதிர்ஷ்டம் குறைந்து காணப்படுகின்றது. எனவே நிதி விஷயங்களை கவனமாக கையாள்வது அவசியம்.

கண்களில் ஏற்படும் எரிச்சல் காரணமாக கவலைகள் ஏற்படும்.செரிமானப் பிரச்சினைகளும் ஏற்படலாம்.




இன்று ஆதாயம் கிடைக்கும் நாள். இன்று உங்கள் மனம்அமைதியாக இருக்கும். நீங்கள் சில முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம்.

உங்கள் பணி உங்களுக்கு ஏற்றதாக இருக்கும். நீங்கள் நல்ல பெயரை சம்பாதிப்பீர்கள்.

குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிப்பதற்கான சாத்தியம் உள்ளது. சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியத்தை சரிபார்த்துக் கொள்ளுங்கள். தியானம் மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் காரியங்களை எளிதாக செய்வீர்கள். அதிக நண்பர்கள் மற்றும் தொடர்புகளைப் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளில் நல்ல பலன்களைப்பெறுவீர்கள்.

இன்று குடும்ப நல்லுறவைப் பேண குடும்பத்துடன் அனுசரித்துப் போக வேண்டியது அவசியம்.உங்களுக்கு மிகவும் நெருங்கியவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

பொருளாதார வளர்ச்சி சிறப்பாக உள்ளது. நிதி சம்பந்தமான சில முக்கிய முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

குடும்ப அங்கத்தினர்களுக்கு மருத்துவ சிகிச்சை செய்யும் செலவு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் கவலைகள் காணப்படும்.




உங்கள் வளர்ச்சிக்கும் அதை அடைவதற்கும் இடையே உள்ள இடைவெளிகளை நீக்கி வளர்ச்சி பெறுவீர்கள். அணுகுமுறையில் யதார்த்தத்தை கடைபிடிக்க முயலுங்கள்.

உங்கள் பணயில் சில மாற்றங்கள் காணப்படும். இன்று பொறுமை மிகவும் அவசியம்.

இன்று குடும்ப உறவினர்களிடம் குறைந்த நல்லிணக்கமே காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சிக்கு சாதகமான நாள் அல்ல. பணத்தை கவனமாக செலவு செய்யவும்.

ஆரோக்கியமாக இருக்க நல்ல உணவு முறையை பின்பற்ற வேண்டும்.முட்டி மற்றும் மூட்டு வலிக்கான வாய்ப்புகள் உள்ளன.




இன்று மொத்தத்தில் நல்ல நாள். ஆனால் சில தடைகளை நீங்கள் சந்திக்க நேரலாம். உங்கள் நேரமும் கவனமும் தேவைப்படும் விஷயங்களுக்கு நேரத்தை ஒதுக்கி கவனம் செலுத்துங்கள்.

இன்று சவாலான பணிகள் செய்ய வேண்டியிருக்கும். அதற்கு நீங்கள் திட்டமிட வேண்டியது அவசியம்.

நெருங்கிய குடும்ப உறவினர்களிடம் அனுசரித்து செல்ல வேண்டும். நட்பான அனுகுமுறை உங்களுக்கு நன்மை தரும்.

இன்று ஏற்ற இறக்கங்கள் காணப்படும். ஸ்திரத்தன்மையை பராமரிக்க செலவுகளை கவனித்துச் செய்யவும்.

தலைவலி மற்றும் சளி உபாதைகளால் பாதிக்கப்படுவீர்கள். ஓய்விற்கென்று நேரம் ஒதுக்குங்கள்.




இன்று பலவிதமான செயல்களில் ஈடுபட்டிருப்பீர்கள். உங்கள் தொடர்பாடலில் கவனமாக இருங்கள்.

பணியில் உங்கள் பொறுமை சோதிக்கப்படும். நீங்களே உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

குடும்ப பிணைப்பு வலுப்பட நீங்கள் உங்கள் குடும்ப அங்கத்தினர்களுடன் உங்களின் சிறப்பான நேரத்தை செலவிடவேண்டும்.

நிதிநிலையைப் பொறுத்தவரை இன்று சோதனையான நாள். பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

சில அசௌகரியங்கள் காணப்படும். யோகா மற்றும் தியானம் பழகுங்கள்.




முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்று உகந்த நாள்.

இன்று பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும்.உங்கள் மேலதிகாரிகள் உங்களை பாராட்டுவார்கள்.

உங்கள் குடும்ப அங்கத்தினர்களுடன் நல்ல உறவை பராமரிக்க வேண்டும். இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

கடன் வகையில் இன்று உங்களுக்கு பணம் கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது. இன்று உங்களுக்கு அனுகூலமான நாள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -16.05.2025




முன்னேற்றத்தை அடைவதற்காக நீங்கள் பல யோசனைகளைக் கொண்டு பரிசோதிப்பீர்கள்.

இன்று உங்கள் பணிகளைச் செய்வதற்கு சிறந்த முறைகளைக் கையாள்வீர்கள். உங்கள் தொடர்பாடல் திறமை காரணமாக உங்கள் கீழ்பணிபுரிபவர்களிடம் நல்லுறவைப் பேணுவீர்கள்.

இன்று அமைதியாக இருந்து நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நல்ல மனநிலையின் மூலம் அது சாத்தியமாகும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். பணம் வீணாகாதவாறு சீராகப் பயன்படுத்துங்கள்.

காய்ச்சல் அல்லது நரம்புப் பிரச்சினைகள் எற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று பலன்கள் கலந்தே காணப்படும். குடும்பம் மற்றும் அதன் வளர்ச்சி சம்பந்தமான பொறுப்புக்கள் காணப்படும். பயணங்கள் ஏற்படலாம்.

பணி நிமித்தமாக பயணங்கள் ஏற்படலாம். கவனத்தில் கொள்ள வேண்டிய நிறைய பொறுப்புகள் காணப்படும்.

தகவல் தொடர்பாடலில் உள்ள பிரச்சனைகள் காரணமாக உங்கள் உடன்பிறந்தோர் மற்றும் உறவினர்களுடன் சச்சரவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும்.

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். கால்களில் வலி காரணமாக அசௌகரியங்கள் காணப்படும்.




இன்று பலன்கள் கலந்தே காணப்படும். நேர்மறையான அணுகுமுறையை கொண்டிருங்கள்.

பணியில் பாதுகாப்பற்ற சூழல் காணப்படும். வேலையின் தரத்தில் கவனம் செலுத்துங்கள். முடிவில் அது வெற்றியை அளிக்கும்.

உறவில் அன்பு குறைந்து காணப்பட வாய்ப்புள்ளது. சூடான விவாதங்கள் ஏற்படலாம்.

நிதிநிலைமை சீராக இருப்பதற்கு உங்கள் செலவுகளில் கவனம் செலுத்துங்கள்.

தலைவலி மற்றும் பல்வலி போன்ற பிரச்சினைகளுக்கு வாய்ப்பு இருப்பதால் ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.தியானம் மேற்கொள்வது நல்லது.




மாறும் சூழ்நிலைக்கேற்ப உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். அசௌகரியங்கள் காணப்படலாம்.

இன்று பணியில் பதற்றமான தருணங்கள் காணப்படும். பொறுமையோடு இருங்கள்.

உரையாடும் போது வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். வார்த்தைகளை கவனமாகக் கையாள வேண்டும் அல்லது முடிந்தால் மௌனமாக இருந்துவிட வேண்டும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. திட்டமிட்டு பணத்தை முறையாக பயன்படுத்தங்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. முட்டி வலி, கண்களில் எரிச்சல் மற்றும் உயர் அழுத்தம் ஆகிய வற்றிற்கான வாய்ப்புகள் உள்ளன. இறை வழிபாடு சிறந்தது.



# தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வைத்துச் செய்வதற்கு வடக்கில் தேசிய மக்கள் சக்திக்கு இடம் ஏதுமில்லை

## ப.சத்தியலிங்கம் எம்.பி. ஆவேசம்

(கி.வசந்தன்)

எமக்கோ தமிழ் தேசியக் கட்சிகளுக்கோ வைத்துச் செய்வதற்கு வடக்கில் தேசிய மக்கள் சக்திக்கு இடமில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – இலங்கை மக்கள் சர்வதிகாரம், கடத்தல், கொள்ளை, கற்பழிப்பு போன்றவை வேண்டாம் என்றுதான், இது வரை 3 வீத வக்கைப்பெற்றிருந்த ஜேவிபிக்கு 42 வீத வாக்கை கொடுத்து இந்த ஆசனங்களை கொடுத்திருந்தார்கள். இல்லை நாங்கள் 3 வீதத்திற்குத்தான் போகப் போறோம் என்றால் அது அவர்களின் பிரச்சினை.

வடக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சிக்கோ அல்லது தமிழ் தேசியக் கட்சிகளுக்கோ வைச்சு செய்யப் போவதாகவும் தேசிய மக்கள் சக்தி கூறியுள்ளது. என்னத்தை வைச்சு செய்யப் போறீர்கள்? யாரை வச்சுச் செய்யப் போறீர்கள்? அதையும் கூற வேண்டும். வைச்சு செய்வதற்கு வடக்கில் இடமில்லை. இதே நிலையில் தேசிய மக்கள் சக்தி செல்வார்களாக இருந்தால் மக்கள் பாடம் புகட்டுவார்கள். – என்றார்.